# சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14–7–2009 அன்று பேரவையில் படித்தளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ் பின்வரும் அறிக்கையினை அவையிலே படித்தளிக்க தங்களின் மேலான அனுமதியினைக் கோருகிறேன்.

கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூருவில் அங்கேயுள்ள தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அய்யன் திருவள்ளுவர் சிலையினைத் திறப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு, 18 ஆண்டு காலமாக அது நடைபெறாமல் தள்ளிப் போடப்பட்டு அந்தப் பிரச்சினைக்கு நல்லதோர் முடிவு காண்கின்ற வகையில் – கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு எடியூரப்பா அவர்களுக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளின் தொடர்ச்சியாகவும் – அண்மையில் அவர் சென்னை வந்திருந்த போது நேரில் இருவரும் பேசிய அடிப்படையிலும் – இரு மாநில அரசுகளும் ஒப்புக் கொண்ட வகையில் – ஆகஸ்ட் திங்கள் 9ஆம் தேதியன்று பெங்களூரு சென்று நானும், கர்நாடக மாநில முதல்வரும் கலந்து கொள்ளும் விழாவில் திருவள்ளுவர் சிலையினை அங்கே திறப்பதென்றும் – அது போலவே ஆகஸ்ட் 13ந்தேதியன்று கர்நாடக முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்கள் சென்னைக்கு வந்து – நானும் அவரும் கலந்து கொள்ளும் விழாவில் – கன்னட கவிஞர் சர்வக்ஞர் அவர்களின் சிலையினை இங்கே திறந்து வைப்ப தென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இரு மாநிலங்களைச் சேர்ந்த இரண்டு பெரும் சான்றோர்களையும் கௌரவிக்கும் வகையில் இந்த விழாக்கள் இரு மாநிலங்களின் ஒப்புதலோடு நடைபெறுவது இரு மாநில மக்களிடையேயும், அரசுகளிடையேயும் நல்லுறவை ஏற்படுத்த வழி வகுக்குமென்று நம்புகிறேன்.